செ.வெ.எண்-16 நாள்-10.02.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் வறட்சி நிவாரண திட்டத்தில் கால்நடைகளுக்கு வைக்கோல் ஒரு கிலோ **ரூ.2** வீதம் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது.

நமது மாவட்டத்தில் பருவமழை மிகவும் குறைவாக பெய்ததால், தீவனம் தடையின்றி வழங்க தமிழக அரசு மானிய விலையில் கால்நடைகளுக்கு வைக்கோல் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தி உள்ளது. இதன்படி இம்மாவட்டத்தில் **அரியலூர் கால்நடை மருத்துவமனை, ஆண்டிமடம், தா.பழூர், பெரியவளையம், மற்றும் செந்துறை** ஆகிய 5 இடங்களில் **உலர் தீவன கிடங்கு அமைக்க** ஒரு கிடங்கிற்கு **ரூ.18 இலட்சம்** வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு கிலோ வைக்கோல் **ரூ.2/-** என்ற மான்ய விலையில் ஒரு மாட்டிற்கு ஒரு நாளைக்கு **3 கிலோ** வீதம் அதிகபட்சம் **5 மாடுகளுக்கு** வாராந்திர தேவையின் அடிப்படையில் வாரம் ஒரு முறை தொடர்ச்சியாக இரண்டு முதல் மூன்று மாதங்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலே கண்ட அரியலூர் மாவட்ட கிடங்குகளுக்கு உலர்ந்த வைக்கோல் குறிப்பிடப்படும் நாட்களுக்கு வழங்க விருப்பம் உள்ள விவசாய விற்பனையாளர்கள் ஒரு கிலோ வைக்கோல் விலையை குறிப்பிட்டு மூடி முத்திரையிடப்பட்ட விண்ணப்பத்தினை ஒவ்வொரு கிடங்கிற்கும் தனித் தனியாக அளிக்கப்படவேண்டும்.

வைக்கோல் விநியோகம் செய்ய விரும்பும் விவசாயிகள் 27.02.2017-ஆம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட புள்ளியினை **அரியலூர் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகம், இரண்டாம் தளம் அறை எண்.211, மாவட்ட ஆட்சியரகம், அரியலூரில்** உள்ள வைக்கோல் விலைப்புள்ளி பெட்டியிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விபரங்களுக்கு மண்டல இணை இயக்குநர் கால்நடை பராமரிப்புத்துறை, அரியலூர் தொலைபேசி எண். 04329-228926, கைபேசி 9445001115 என்ற தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

## வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்